ஒருவரது உடல் என்பது அதனளவில் முழுமையாகத்தான் இருக்கிறது. அரசியல் இயக்கங்களில் இருக்கிறமாதிரி இலட்சோபஇலட்சம் முரண்பட்ட போக்குகளாகவோ, சிந்தனைப் போக்குகளாகவோ, தன்னிலையானதாகவோ உடம்பைப் பிரிக்கமுடியாது என்றான் புரட்சியாளன் அலி பிசாக்.

பிறப்பும் மரணமும் குறித்தும் அதற்கு இடையிலான வாழ்வு குறித்தும் அதனது அர்த்தம் குறித்ததுமான தேடலே தத்துவத்தின் வெளியாக இருக்கிறது.

வாழ்வு, மரணம் அதனது அர்த்தம் குறித்த மார்க்சிய நோக்கு என்று எதனையேனும் நாம் வரையறுக்க முடியுமா? உயிர் வாழ்தலும் உடலின் அழிவும் குறித்து மார்க்சியர்கள் என்ன கருதுகிறார்கள்? உலகில் வன்முறையின் இடம் குறித்ததாகவே இந்த உரையாடல் இயங்க முடியும். அழிவை மோதியழிப்பதில், தம் இழப்பில் புதிய சமூகத்தை உருவாக்க முடியும் என்று நம்பியவர்கள் மார்க்சியர்கள்.

மார்க்ஸின் மரணம் நிகழ்ந்த தருணத்தில். தனது மயான உரையில், மார்க்ஸின் உடலின் அழிவை மகத்தான மூளையொன்று சிந்திப் பதை நிறுத்திக்கொண்டு விட்டதாக அறிவித்தார் அவரது அன்புத்தோழனான பிரடரிக் எங்கெல்ஸ்.

மரணம் நம்மை எங்கே எதிர்கொள்கிறதோ அங்கேயே திறந்த மனத்துடன் அதனை நாம் எதிர்கொள்வோம் என்றான் புரட்சியாளனான குவேரா.

மரணம் நிச்சயமானது. அதனைப் பதட்டமின்றி எதிர்கொள்ள நம்மைத் தயார்ப்படுத்திக் கொள்வதே அறிவுபூர்வமான, முட்டாள்தனமற்ற பார்வை என்றான் புரட்சிக் கலைஞனான தாமஸ் கிதராஸ் அலியா.

மார்க்சியச் சிந்தனையாளன், புரட்சியாளன், கலைஞன் என எல்லாவகையிலும் மார்க்சியர் தாம் வாழும் காலம்வரை சிந்திப்பதிலும், திட்டமிட்டுச் செயல்படுதலிலும், மரணத்தை எதிர்கொள்ளத் தம்மைத் தயார்ப்படுத்திக் கொள்வதிலும் மரணத்தை வெல்ல முடியும் என்றே கருதினார்கள்.

உடல் அழிகிறபோது தனிமனிதனின் விசேஷமான சிந்தனையின் பங்களிப்பை நாம் இழக்கிறோம். உடல் அழிந்தது அழிந்ததுதான். ஆனால் உடல் ஜீவித்திருந்தபோது அது கிளர்த்திய இலட்சோப இலட்சம் முரண்களின் சாட்சியமாக அது விட்டுச் சென்ற நினைவுகள் நம்மிடம் இருக்கிறது. அதிலிருந்து கற்றுக் கொள்ள ஏதேனும் இருக்கிறதா எனும் மறுபரிசீலனையைத்தான் நாம் எமது தோழர்களையும் நண்பர்களையும் நினைவு கூரும்போது மீளப் பார்த்துக் கொள்கிறோம்.

பிறரின் மீட்சியில் தமது விடுதலையைக் கண்டவர்கள் குறித்து ஒன்றை மட்டும் நாம் நிச்சயமாகச் சொல்லமுடியும்.

சே குவேரா சொன்னது போல கடினமாக இருக்கும் என்று தோன்றினால் கூட, நிஜமான புரட்சிக்காரன் என்பவன் அழுத்தமான தீவிர அன்பினால்தான் வழிநடத்தப்படுகிறான்.

(யமுனா ராஜேந்திரன்)

# மறக்காத மனமுகமாய்

## எங்கள் கலைச்செல்வன்..



## ஓராண்டு நினைவொட்டிய நாள்

**05 March 2006**

EUROSITES
Salle Espagne
144-146 Avenue President Wilson
93210 La Plaine Saint Denis

M° : Porte de la chapelle
RER B : La Plaine Stade de France
Bus : 153,302

தோழமையோடு அழைக்கிறோம்
நண்பர்கள் வட்டம் - பிரான்ஸ்

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

மார்ச் 05ம் திகதி ஞாயிற்றுக்கிழமை

காலை

10.30 - 12.00
**இருப்பும் இல்லாமையும்.**
க.வாசுதேவன்.

12.00 - 13.00
**மதிய உணவு.**

13.00 - 14.00
**நினைவுகளும் நாங்களும்.**
(நண்பர்களின் நினைவுரைகள்.)

14.00 - 14.30
**தேநீர் இடைவேளை.**

14.30 - 15.30
**குழந்தைகளிடம் பொய்களைக் கூறாதீர்கள்.**
-ஆற்றுகை-
இயக்கம் : அருந்ததி.

15.30 - 17.00
மறக்காத மனமுகமாய்
எங்கள் கலைச்செல்வன்...
நினைவொட்டிய பேச்சு:
**தேடலின் அவலச்சுமை**
-ஜேர்மானியக் கவிஞன் கோதேயின் தத்துவ நோக்கு-
ந.சுசீந்திரன்.

17.00 - 17.30
**தேநீர் இடைவேளை.**

17.30 - 19.30
**சமாதானத்தின் கதவுகள்.**
-ஐரிஷ் படிப்பினைகளை முன்வைத்து-
வி.சிவலிங்கம்.

---

ரவீந்திரன் பிரதீபனின்
**முடிவற்ற வெளி...**
(புகைப்படங்கள் பார்வைக்காக)

---

**இசையின் பயணம்...**
(தமராவின் வயலின் இசை)

---

**கலையும் கலைஞனும்**
**காலமாதலும்...**
இரா.ரஜீன்குமார்

---

**தொடர்புகளுக்கு:-**
01 42 63 31 76
06 17 87 68 27
06 72 94 79 37
06 03 70 60 15

**மின்னஞ்சல்:-**
ashokyogan@hotmail.com

**குறிப்பு:-**
porte de la chapelle metroவில் இருந்து இறங்கினால் 10நிமிடங்கள் நடை அல்லது அங்கிருந்து 153 அல்லது 302 இலக்க பஸ் எடுத்து Eglise de la plaine என்னும் தரிப்பில் இறங்கவேண்டும்

**கார்ல் மார்க்ஸ்**

*உனது தாடியின் ஆழத்தினின்று*
*ஜொலிக்கும் சிங்கத்தின் மகோன்னத*
*விழிகளிலிருந்து*
*மூட்டமாக விளக்கேற்றப்பட்ட*
*புழுதி படர்ந்த நூலகங்களிலிருந்து*

*ஜென்னியின் பால்போன்ற கரங்களிருந்து*
*புகலிட வாழ்வின் கடினமான துயர்களிலிருந்து*
*புகை நிரம்பிய*
*ரெய்னீச் பத்திரிகை அறைகளின்*
*கோபத்திலிருந்து*

*முடிவற்ற இரவுகளின்*
*சின்ன வெளிச்ச அதிரல்களினின்று*
*கடவுளின் மூடமான சிருஷ்டிச் செயலை*
*நேர்ப்படுத்தியவன் நீ*

*நம்பிக்கைப் பாவம் சுமந்த மனிதனே*

*பொறுப்பானவர்க்கெல்லாம் பொறுப்பானவனே*
*சந்தோஷங்களின் மனிதனே*

*இன்னும் நீ எம்மிடையில்*
*நடந்துகொண்டுதானிருக்கிறாய்*

ரோக் டால்டன்

தமிழில்:
யமுனா ராஜேந்திரன்

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்